மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஒன்றியம் பரசலூர் அரசு உதவி பெறும் நடுநிலைப் பள்ளியில் அரசு உதவிப் பெறும் பள்ளிகளுக்கு விரிவு படுத்தப்பட்ட முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தை சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தொடங்கி வைத்தார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி.மகாபாரதி ஆகியோர் உள்ளனர்.

பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் 100! நூற்றாண்டு நிறைவு பெருவிழா பொது உறுப்பினர்கள் கூட்டம் பூமணம் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. ஆ.இராசா.எம்.பி. கே.என்.அருண்நேரு. எம்.பி. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். மாவட்ட கழகச் செயலாளர் வீ.ஜெகதீசன் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நீலகிரி மாவட்டத்தில்

விரிவாக்கப்பட்ட காலை உணவுத் திட்டப் பணிகள்!

அமைச்சர் கா.ராமச்சந்திரன் தொடங்கி வைத்து பேச்சு!

நீலகிரி, ஜூலை 18- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, நீலகிரி மாவட்டத்தில், ஊரக பகுதிகளில் அரசு உதவிப்பெறும் தொடக்கப்பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம் செய்யும்; பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் தொடங்கி வைத்து, குழந்தைகளுக்கு உணவு வழங்கி, குழந்தைகளுடன் உணவு அருந்தினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், கீழச்சேரி அரசு உதவி பெறும் புனித அன்னாள் தொடக்கப் பள்ளியில், ஊரக பகுதிகளில் அரசு உதவிப்பெறும் தொடக்கப்பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, நீலகிரி மாவட்டம், குன்னூர் ஊராட்சி ஒன்றியம், மேலூர் ஊராட்சி, உட்லாண்ஸ் அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளியில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தொடங்கி வைத்து, பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவினை வழங்கி, அவர்களுடன் உணவருந்தினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து, சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

குறிப்பாக பள்ளிக்கு வரும் குழந்தைகள் பசியின்றி கல்வி கற்பதை உறுதி செய்யும் வகையில் உலகத்திற்கே முன்னோடி திட்டமான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டமானது பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான 15.09.2022 அன்று முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், ஸ்ரீமதுரை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டம் மிகவும் பயனுள்ள வகையில் அமையப்பெற்றதால் இத்திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு வழங்க வேண்டும் என்ற உன்னத நோக்கில் இன்றைய தினம் திருவள்ளூர் மாவட்டம், கீழச்சேரி அரசு உதவி பெறும் புனித அன்னாள் தொடக்கப் பள்ளியில் தொடங்கி வைத்து, பள்ளி மாணவ, மாணவிகளுடன் உணவு அருந்தினார்.

முதலமைச்சர் அவர்களால் அறிவித்து செயல்படுத்திவரும்முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் 14,40,351 மாணாக்கர்கள் பயனடைந்து வருகின்றனர். மேலும், தமிழ்நாடு திட்டக்குழு இத்திட்டத்தினை பல்வேறு ஆய்வுகளின் மூலம் மதிப்பீடு செய்துள்ளது. இந்த மதிப்பீட்டின் அடிப்படையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மாணவர்களிடம் மட்டுமல்லாமல் பெற்றோர்களிடமும் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

மேலும், முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தின் மூலம் சத்தான உணவினை வழங்குவதன் காரணமாக பள்ளிகளில் மாணாக்கர்களின் வருகையும் அதிகரித்துள்ளது. வேலைக்கு செல்லும் தாய்மார்களின் சுமை குறைந்துள்ளது. பசியின்றி குழந்தைகள் சத்தான உணவு உட்கொள்வதால் குழந்தைகளின் ஆரோக்கியம், மகிழ்ச்சி மற்றும் படிப்புத் திறன் அதிகரித்துள்ளது. பள்ளிக் கல்வியை மேலும் பரவலாக்கவும், கற்றலை இனிமையாக்கவும், எல்லா குழந்தைகளும் பசியின்றி கல்வியறிவு பெற்றிடவும், எந்த தியாகத்தையும் செய்திடுவோம் என்பது தமிழ்நாடு அரசின் உன்னத நோக்கமாகும். அதன்படி, தமிழ்நாட்டில் ஊரக பகுதிகளில் உள்ள அரசு உதவிப் பெறும் தொடக்கப் பள்ளிகளிலும் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை இந்த திட்டம் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடப்படும் முன்னாள் முதலமைச்சர் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளில் இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்;பட்டுள்ளது.

மேலும், ஊரகப் பகுதிகளிலுள்ள அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளிகளில் இத்திட்டத்தினை விரிவுப்படுத்திட ஆணையிட்டதை தொடர்ந்து, நீலகிரி மாவட்டம் உதகை வட்டாரத்தில் 8 அரசு உதவி பெறும் துவக்க பள்ளிகளிலும், குன்னூர் வட்டாரத்தில் 9 பள்ளிகளிலும், கோத்தகிரி வட்டாரத்தில் 8 பள்ளிகளிலும், கூடலூர் வட்டாரத்தில் 1 பள்ளியிலும் என மொத்தம் 26 அரசு உதவிப்பெறும் தொடக்கப் பள்ளிகளில் 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் 466 மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

ஏற்கனவே நமது மாவட்டத்தில் முதற்கட்டமாக முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தில் கூடலூர் வட்டாரத்தில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் 63 அரசு தொடக்கப் பள்ளிகளில் 2,749 மாணவ, மாணவியர்களும், இரண்டாம் கட்டமாக கிராம ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிப் பகுதிகளிலுள்ள 203 அரசு தொடக்கப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் விரிவாக்கம் செய்யப்பட்டதன் மூலமாக 6,353 மாணவ, மாணவியர்களும் என மொத்தம் 266 அரசு தொடக்க பள்ளி மற்றும் நடுநிலை பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் 9,102 மாணவ, மாணவியர் பயன்பெற்றுள்ளனர்.

அதேபோல் இரண்டாம்கட்ட விரிவாக்கத்தில் ஒருங்கிணைந்த சமையல் கூடத்தின் மூலம் உதகை நகராட்சிக்குட்பட்ட 8 பள்ளிகளில் 457 மாணவ, மாணவியர்களும், குன்னூர் நகராட்சிக்குட்பட்ட 5 பள்ளிகளில் 168 மாணவ, மாணவியர்களும், கூடலூர் நகராட்சிக் குட்பட்ட 6 பள்ளிகளில் 661 மாணவ, மாணவியர்களும், நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட 5 பள்ளிகளில் 310 மாணவ, மாணவியர்கள் என மொத்தம் 24 பள்ளிகளில் 1,596 மாணவ, மாணவியர் பயனடைந்து வருகின்றனர்.

அதுமட்டுமல்லாமல், நீலகிரி மாவட்டத்தில் இது வரை கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ், 1.12 இலட்சம் மகளிர்களும், புதுமைப் பெண் திட்டத்தின்கீழ் 1,031 மாணவியர்களும், விடியல் பயணத்தின் மூலம் 50,000 மகளிர்களும், மக்களைத் தேடி மருத்துவ திட்டத்தின்கீழ் 1,67,317 பயனாளிகளும், கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டத்தின்கீழ் 30,653 பயனாளிகளும், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 திட்டத்தின்கீழ் 975 பயனாளிகளும் பயன்பெற்றுள்ளனர்.

அதுமட்டுமல்லாமல், முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு நான் முதல்வன் திட்டம், இல்லம் தேடி கல்வி உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை தீட்டி சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது. மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றது முதல் நமது மாவட்டத்தில் இதுவரை வேலைநாடுநர்களுக்கு 6 தனியார்த்துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, 580 நிறுவனங்களில் 3,101 நபர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். கலைஞரின் கனவு இல்லத் திட்டத்தில் நமது மாவட்டத்தில் முதற்கட்டமாக 1,334 பயனாளிகளுக்கு வீடு கட்டப்படவுள்ளது. அந்த வகையில் இன்று வரை 539 வீடுகளுக்கான முதற்கட்ட பணிகள் துவங்கப்பட்டுள்ளது. இதுபோன்ற பல்வேறு திட்டங்கள் முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்களாகிய நீங்கள் இத்திட்டங்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்து, கோடேரி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவியர்களின் வரவேற்பு கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து, உட்லாண்ஸ் அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சுற்றுலாத்துறை அமைச்சர், ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை கற்பிக்கும் குன்னூர் ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 248 ஆசிரியர்களுக்கு கையடக்க கணினி (TABLET) வழங்கும் அடையாளமாக 10 ஆசிரியர்களுக்கு கையடக்க கணினிகளையும் (TABLET), தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் சார்பாக 43 மாணாக்கர்களுக்கு விலையில்லா மழைக்கோட்டு, கம்பளிச்சட்டை, மழைக்கால காலனி, செருப்பு ஆகியவற்றையும் வழங்கும் அடையாளமாக 6 மாணாக்கர்களுக்கு வழங்கினார். மேலும், சுற்றுலாத்துறை அமைச்சர், கலைஞரின் கனவு இல்லத் திட்டத்தின்கீழ் 7 பயனாளிகளுக்கு தலா ரூ.3.53 இலட்சம் மதிப்பில் வீடுகள் கட்டுவதற்கான வேலை உத்தரவு ஆணையினையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், மாவட்ட ஊராட்சித்தலைவர் பொன்தோஸ், மகளிர் திட்ட இயக்குநர் காசிநாதன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் தயாளன், குன்னூர் ஊராட்சி ஒன்றியத்தலைவர் திருமதி.சுனிதாநேரு, உதவி திட்ட அலுவலர்கள் அருண், விஜய்குமார், குன்னூர் வட்டாட்சியர் கனிசுந்தரம், குன்னூர் வட்டார வளர்ச்சி அலுவலர் சுப்ரமணி, மேலூர் ஊராட்சித்தலைவர் திருமதி.ரேணுகாதேவி, பள்ளி தலைமையாசிரியர் சிவக்குமார், வட்டார மேலாளர்கள், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள், ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருவள்ளூர் மாவட்டத்தில் ஊரக பகுதிகளில் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம் திருக்கானூர் பட்டி ஊராட்சியில் புனித மரியன்னை அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் தீபக் ஜேக்கப், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன், டி.கே.ஜி.நீலமேகம், மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், மாவட்ட ஊராட்சித் தலைவர் ஆர்.உஷாபுண்ணியமூர்த்தி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பாலகணேஷ் ஆகியோர் கலந்துகொண்டு பள்ளி மாணவ,மாணவியர்களுடன் உணவினை உட்கொண்டார்கள்.

பர்கூர் சட்டமன்ற தொகுதிகளில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகள் அமர்ந்து படிப்பதற்கு மேசை நாற்காலிகள் இல்லாததை அறிந்த பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் 12 அரசு மேல்நிலை பள்ளிகளுக்கு 23 லட்ச ரூபாய் திட்ட மதிப்பீட்டில் மேசை, நாற்காலிகளை வழங்க திட்டமிட்டு நிதி ஒதுக்கி தந்தார். இந்த நிதியிலிருந்து மேசை, நாற்காலிகள் தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர்களிடம் ஒப்படைப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. கிருஷ்ணகிரியில் உள்ள தொழிற்பேட்டையில் நடந்த நிகழ்ச்சிகளில் 12 அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களிடம் மேசை, நாற்காலிகளை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் அஸ்லாம், ஒன்றிய செயலாளர்கள் சாந்தமூர்த்தி, ராஜேந்திரன், தேங்காய் சுப்ரமணி, அறிஞர், விவசாய அணி அமைப்பாளர் இளையராஜா , மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் லட்சுமி பிரியா , தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் சுரேந்திரன் , எஸ் எஸ் இண்டஸ்ட்ரி சாதிக் பாஷா உள்ளிட்ட நிர்வாகிகள், பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இராமேஸ்வரத்தில் மீனவர்கள் பிரச்சினையில் :

இலங்கை அரசை கண்டிக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

நாகை மாவட்டத்தில் இருந்து பெரும் அளவில் கலந்து கொள்ள என்.கௌதமன் வேண்டுகோள்!

நாகை.ஜூலை. 18- நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தமிழக கடலோர மாவட்ட மீனவர்களின் முக்கிய தொழில் கடலுக்குச் சென்று மீன் பிடிப்பதாகும். மீனவர்களுக்கு மீன் பிடி தொழிலை தவிர வேறு தொழில் தெரியாது. இந்த மீனவர்கள் கடலுக்குச் சென்று மீன் பிடித்து வருவதால் மீனவர்கள் மட்டும் அல்லாமல் மீன் விற்பனை யாளர், ஏற்றுமதியாளர்கள் மீன் பிடி தொழிலை சார்ந்த தொழிலாளர்கள் என லட்சக்கணக்கானவர்கள் வேலை வாய்ப்பு பெறுகின்றனர்.

மீனவர்கள் கடலுக்குத் தொலை தூரம் சென்று நாள் கணக்கில் கடலில் தங்கி மீன் பிடித்து வரும் நிலையில் அண்டை நாடான இலங்கை நாட்டின் கடற்படையினர் தமிழ்நாட்டு மீனவர்களை சிறை பிடிப்பதும், விசைப் படகை பறிமுதல் செய்வதும், மீனவர்களை கண்மூடித்தனமாக தாக்குவதும் தொடர்ந்து கொண்டே வருகிறது. இதனால் மீனவர்கள் கடலுக்கு அச்ச உணர்வுடன் மீன் பிடிக்க செல்கின்றனர்.

இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் ஒரு பக்கம் என்றால் கடற்கொள்ளையர்களின் தாக்குதலுக்கும் மீனவர்கள் ஆளாகின்றனர்.

நாகை, இராமநாதபுரம், புதுக்கோட்டை உள்ளிட்ட தமிழ்நாடு கடலோர மாவட்டங்களின் மீன் பிடி தொழில் செய்து வரும் விசைப்படகு மீனவர்கள் மற்றும் நாட்டுப் படகு மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கின்ற வகையில் மீன் பிடி தொழில் செய்து வரும் மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் இலங்கைக் கடற்படை தொடர்ந்து கைது செய்வதும், அவர்களுடைய விசைப்படகுகளையும், நாட்டுப்படகுகளையும் பறிமுதல் செய்வது போன்று தொடர்ந்து அத்துமீறி ஈடுபட்டுவரும் இலங்கை அரசை கண்டிக்காமல் தொடர்ந்து வேடிக்கைப்பார்த்தும், மீனவர்களை வஞ்சித்தும் பாராமுகத்துடன் செயல்பட்டு வரும் ஒன்றிய பாசிக பா.ஜ.க. அரசை கண்டித்து நாளை (19.7.2024 - வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணிக்கு இராமேஸ்வரம் பேருந்து நிலையம் அருகில் நாகை முதல் இராமநாதபுரம் வரையில் உள்ள அனைத்து மீனவ சங்கங்கள் மற்றும் இராமநாதபுரம்,நாகை,புதுக்கோட்டை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம் இணைந்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து மீனவர் கிராமங்களை சேர்ந்த மீனவர்கள், மீனவ கிராம பஞ்சாயத்தார்கள், மீனவ சங்கங்கள், கழக மீனவ அணியினர், நாகை மாவட்டக் கழகத்தை சேர்ந்த நிர்வாகிகள் பெரும் அளவில் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டதை வெற்றியடையச் செய்திட வேண்டும்

இவ்வாறு அந்த அறிக்கையில் நாகை மாவட்டக் கழகச் செயலாரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் கூறியுள்ளார்.

மணலூர்பேட்டை பேரூர் கழக செயல் வீரர்கள் கூட்டம்!

வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

கள்ளக்குறிச்சி மணலூர் பேட்டை ஜூலை 18.

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம்,ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதி, மணலூர்பேட்டை பேரூர் கழக செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது,

பேரூர் கழக அவைத் தலைவர் மாணிக்கம் தலைமை தாங்கினார், பேரூர் கழக செயலாளர் ஜெய்கணேஷ், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் வழக்கறிஞர் பாலாஜி பூபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர், பேரூராட்சி மன்ற துணை தலைவர் தம்பிதுரை செயல் வீரர்கள் கூட்டத்திற்கு வந்த அனைத்து நிர்வாகிகளையும் வரவேற்றார்.

இந்த செயல்வீரர்கள் கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் கலந்து கொண்டு நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தல் மற்றும் விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் வெற்றிபெற கடுமையாக உழைத்த கழக நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவித்தும்,மேலும் கழக ஆக்க பணிகள் குறித்தும் பல்வேறு கருத்துகளை கழக நிர்வாகிகளுக்கு எடுத்துரைத்து பேசினார்,இதில் மணலூர்பேட்டை பேரூர் கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட,ஒன்றிய,பேரூர் கழக நிர்வாகிகள்,வார்டு கழக செயலாளர்கள், பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நாகை மாவட்டம் கீழையூர் மேற்கு ஒன்றியம் திருக்குவளை கடைத்தெருவில் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் இந்திய கூட்டணி சார்பில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவை. செல்வராஜ் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியில் நாகை மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன் நன்றி தெரிவித்து பேசினார் கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் நாகைமாலி, கீழையூர் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் சோ.பா.மலர்வண்ணன், பொதுக்குழு உறுப்பினர்கள் இல. பழனியப்பன, கோசி குமார், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் மாரிமுத்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில குழு உறுப்பினர் செல்வம் மற்றும் பலர் உள்ளனர்

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் மத்திய ஒன்றியம் திருக்கடையூர் ஊராட்சியில் மயிலாடுதுறை நாடாளுமன்ற தொகுதியில் இந்தியா கூட்டணி கட்சியின் சார்பில் மயிலாடுதுறை நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற காங்கிரஸ் கட்சியை சேர்ந்த ஆர்.சுதா வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியில் மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து பேசினார். உடன் செம்பனார் கோயில் மத்திய ஒன்றிய கழக செயலாளர் அமுத. விஜயகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.